வெற்றி வாகை சூட

வெற்றிக்கு வழி

# 12ஆம் வகுப்பு

# வணிகவியல்

# முதல் திருப்புதல் தேர்வு-2023

## வெவ்வேறு மாவட்ட வினாத்தாள்களின் தொகுப்பு

# முதலாம் திருப்புதல் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி வணிகவியல் மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். 20×1=20

1) மேலாண்மை என்பது ஒரு ________
அ) கலை ஆ) அறிவியல் இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை (அ) அறிவியல்

2) மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

3) மூலதனச் சந்தை என்பது ________க்கான ஒரு சந்தை ஆகும்
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி இ) நீண்ட கால நிதி ஈ) குறுகிய கால நிதி

4) மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ________ ஆவர்
அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

5) பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ________
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

6) தன் வணிகர் பங்குச் சந்தையில் ஈடுபடுவது ________
அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

7) இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ________
அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

8) மனிதவளம் என்பது ஒரு ________
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான ஈ) நடப்பு

9) தேர்வு பொதுவாக ஒரு ________ செயலாக கருதப்படுகிறது.
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) இயற்கை ஈ) இவை ஒன்றும் இல்லை

10) ________ ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

11) கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக்கூறு ஆ) பொருள்கூறு இ) திட்டக்கூறு ஈ) விலைகூறு

12) இணையம் மூலம் பொருட்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறையை ____
அ) பசுமை சந்தையிடுதல். ஆ) மின் சந்தையிடுதல்
இ) சமூக சந்தையிடுதல் ஈ) மெட்டா சந்தையிடுதல்

13) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப்.கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

14) நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள ________ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளம் ஆகும்
அ) ரொக்க ரசீது ஆ) உத்திரவாத அட்டை இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

15) தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார்?
அ) இந்திய உச்சநீதிமன்றத்தின் சேவை (அல்லது) ஓய்வுபெற்ற நீதிபதி
ஆ) பிரதம மந்திரி
இ) இந்தியத் தலைவர்
ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல

16) ஜி.எஸ்.டி. என்பது
அ) சரக்கு மற்றும் சமூகவரி ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
இ) சரக்கு மற்றும் விற்பனை வரி ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

17) புதிய பொருளாதாரக் கொள்கை ________ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

18) எத்தனை மாதங்களுக்கு பின் கா்சோலை காலாவதி ஆகிறது?
அ) 3 மாதங்கள் ஆ) 4 மாதங்கள் இ) 5 மாதங்கள் ஈ) 1 மாதங்கள்

19) கீழ்கண்ட பங்குகளில் எது முந்தைய பங்குதாரர்களின் துணை கொண்டு தனது நிறுமத்தின் முதலை உயர்த்த வெளியிடும் பங்கு ________

அ) சாதாரணப் பங்குகள் ஆ) உரிமைப் பங்குகள்
இ) முன்னுரிமைப் பங்குகள் ஈ) ஊக்கப்பங்குகள்

20) ________ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்

அ) சட்டமுறை ஆ) ஆண்டுப்பொது இ) சிறப்பு ஈ) வகுப்பு

## பகுதி-ஆ

7×2=14

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

21) மேலாண்மை என்றால் என்ன?
22) செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக?
23) முக்கிய முடிவுப் பகுதிகள் [KRA] என்பது என்ன?
24) கடன் சந்தை என்றால் என்ன?
25) செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.
26) நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?
27) கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள். தருக.
28) தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
29) ஏதேனும் நான்கு அரசின் தொழில் முனைவோர் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
30) "பகராள்" - சிறுகுறிப்பு வரைக.

## பகுதி-இ

7×3=21

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 40-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

31) மேலாண்மையின் முதன்மைப் பணிகளைப் பட்டியலிடுக.
32) குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக. (ஏதேனும் 3)
33) ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுமங்களைப் பற்றி விளக்குக.
34) பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்?
35) மனித வளங்களின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 3)
36) காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?
37) செயற்கை பற்றாக்குறை என்றால் என்ன?
38) உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.
39) சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
40) ஆட்சேர்ப்பு முறைக்கும், தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி? (ஏதேனும். 3)

## பகுதி-ஈ

7×5=35

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-

41) அ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி? (அல்லது)
ஆ) குறியிலுக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை?

42) அ) பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையேயான வேறுபாடுகளை விவரி? (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) செபியின் பணிகளை விவரி?

43) அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.

44) அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (அல்லது)
ஆ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

45) அ) மகளிர் தொழில்முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) இயக்குநரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி. (ஏதேனும் 5)

46) அ) ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.
(அல்லது)
ஆ) பல்வேறு வகையான சோதனைகளை சுருக்கமாக விளக்குக. (ஏதேனும் 5)

47) அ) மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க. (அல்லது)
ஆ) காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

******

waytosuccess

WAY TO SUCCESS
V12Com
VIRUDHUNAGAR

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

-----

**வகுப்பு 12**

நேரம்: 3.00 மணி | **வணிகவியல்** | மொத்த மதிப்பெண்கள்: 90

**பகுதி - I**

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **20×1=20**

**ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) "மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது, மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது" என்று கூறியவர்

அ) ஜார்ஜ் ஓடியோர்ன் ஆ) ஹென்றி ஃபோயல் இ) பீட்டர் F. டிரக்கர் ஈ) F.W.டேலர்

2) அரசுப்பத்திரங்கள் ............... போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.

அ) மாநில அரசுகள் ஆ) பகுதி அரசு அமைப்புகள்

இ) மத்திய அரசு ஈ) மேற்கூறிய அனைத்தும்

3) **கூற்று (A)** : மனிதவள மேலாண்மை என்பது கண்ணுக்கு புலனாகாத செயல்பாடு.

**காரணம் (R)** : இதனை முடிவுகளால் மட்டுமே அளவிட முடியும்.

அ) (A) சரி ஆனால் (R) தவறு.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)க்கு சரியான விளக்கம்.

இ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)க்கு சரியான விளக்கம் அல்ல.

ஈ) (A) தவறு ஆனால் (R) சரி.

4) இணைய வழி ஆட்சேர்ப்பு என்பது ............... மூலமே சாத்தியம்.

அ) 4ஜி ஆ) கணினி இ) இணையம் ஈ) அகன்ற வரிசை

5) ............... கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கூட்டப்படும்.

அ) சிறப்பு ஆ) சட்டமுறை இ) வகுப்பு ஈ) ஆண்டு பொது

6) நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் ...............

அ) நுகர்வோர் திருப்தி ஆ) அதிகமான இலாபம்

இ) சமுதாயத்திற்கு சேவை ஈ) குறைவான இலாபம்

7) ஒரு தனியார் நிறுமத்தில் குறைந்தது ............... இயக்குநர்கள் இருக்க வேண்டும்.

அ) மூன்று ஆ) ஏழு இ) இரண்டு ஈ) ஐந்து

8) **பொருத்துக:**

1. தலால் தெரு - i) நியூயார்க் பங்கு சந்தை
2. வால் தெரு - ii) கனடிய பங்கு சந்தை
3. லம்பார்டு தெரு - iii) பாம்பே பங்கு சந்தை
4. டொராண்டோ - iv) இலண்டன் பங்கு சந்தை

அ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii) ஆ) (1)-(i), (2)-(iii), (3)-(ii), (4)-(iv)

இ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i) ஈ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

9) கீழே கொடுக்கப்பட்டவைகளில் பொருந்தாத இணை எது?

அ) முன்னோக்கிய சந்தை - எதிர்கால சந்தை

ஆ) கடன் சந்தை - அரசுப்பத்திரங்கள்

இ) பணச்சந்தை - வணிகத்தாள்கள்

ஈ) சமநிலைப் பங்குச் சந்தை - கடனீட்டுப் பத்திரங்கள்

10) நுகர்வோரியல் எனும் சொல் தோன்றிய ஆண்டு

அ) 1954 ஆ) 1960 இ) 1958 ஈ) 1957

11) பெரிய நிறுவனங்களின் தொழில் மூலதனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளருக்கு உதவுவது ............... ஆகும்.

அ) நிலை வைப்புகள் ஆ) பரஸ்பர நிதி

இ) பங்குகள் ஈ) கடனீட்டு பத்திரங்கள்

12) ............... புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும். இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.

அ) தனியார்மயமாக்கல் ஆ) தாராளமயமாக்கல்

இ) உலகமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

13) ஒரு நிறுமம் பதிவு செய்யப்பட்ட ............... நாள்களுக்குள் இயக்குநரவை முதற்கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

அ) 50 ஆ) 45 இ) 30 ஈ) 60

14) சிறப்புத் தீர்மானம் ...............க்கு தேவைப்படுகிறது.

அ) கடனீட்டுப்பத்திரத்தை மீட்க ஆ) பங்காதாயம் அறிவிக்க

இ) இயக்குநரை பணியமர்த்த ஈ) தணிக்கையாளரை பணியமர்த்த

15) நிறுமச் சட்டப்படி இயக்குநர்கள் ............... மூலம் நியமிக்கப்பட வேண்டும்.

அ) மத்திய அரசு ஆ) நிறுமச் சட்டவாரியம்

இ) நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஈ) இயக்குநர்கள் குழு



www.waytosuccess.org wtsteam@gmail.com

16) முந்தைய பங்குதாரருக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடப்படும் பங்குகள்

அ) ஊக்கப் பங்குகள் ஆ) சாதாரணப் பங்குகள்

இ) உரிமைப் பங்குகள் ஈ) முன்னுரிமைப் பங்குகள்

17) ............ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அ) டிஜிட்டல் இந்தியா ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

இ) ஸ்டார்ட்டப் இந்தியா ஈ) வடிவமைப்பு இந்தியா

18) கோழிப்பண்ணை, மலர் வணிகம், பழ உற்பத்தி போன்றவைகச் செயல்கள் கீழ்குறிப்பிட்ட துறையில் எதனைச் சார்ந்த செயல்?

அ) கூட்டுப்பங்கு நிறுமம் ஆ) சில்லறை வணிகம்

இ) வணிகம் ஈ) வேளாண்மை இயல்

19) தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?

அ) இடர்தாங்கி ஆ) புதுமை படைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

20) எத்தனை மாதங்களுக்குப் பின் காசோலை காலாவதியாகிறது?

அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதம்

## பகுதி - II

**7×2=14**

குறிப்பு: **ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

21) பகராள் - சிறுகுறிப்பு வரைக.

22) ஒரு நிறுமத்தில் முக்கிய நிர்வாக நபர்களைப் பட்டியலிடுக.

23) கடன் பத்திரங்கள் என்றால் என்ன?

24) நிகழ் சரக்கு என்றால் என்ன?

25) 'விற்பனையாளர் ஜாக்கிரதை' - விளக்கு.

26) ஜான் F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?

27) காளை - விளக்குக.

28) துணிகர நிதி நிறுவனங்கள் - விளக்குக.

29) டிஜிட்டல் இந்தியா - குறிப்பு வரைக.

30) மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுதிட இடம் போதவில்லையென்றால் எவ்வாறு மேலெழுதலாம்?

## பகுதி - III

**7×3=21**

குறிப்பு: **ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?

32) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளில் மூன்றினைக் கூறுக.

33) சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளைத் தருக.

34) தனியார்மயமாக்கல் என்றால் என்ன?

35) பங்குச்சந்தை என்றால் என்ன?

36) நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிவது யாது?

37) மேலாண்மை வரைவிலக்கணம் தருக.

38) பல வகையான திறந்த மற்றும் இரகசிய வாக்கெடுப்பு முறைகளைக் கூறுக.

39) மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3)

40) X பொது வரையறு நிறுமம் நேர்மைப் பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்நிறுமம் கலைப்பிற்குள்ளானது. நிறும கலைப்பின் போது எவ்வகைப் பங்குநர் தங்கள் பங்குமுதலை முதலில் திரும்பப் பெறுவர்? விளக்குக.

## பகுதி - IV

**7×5=35**

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) நிறுமச் செயலரின் பணிகளை விளக்குக. **(அல்லது)**

ஆ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விவரி.

42) அ) தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக. **(அல்லது)**

ஆ) இயக்குநரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி.

43) அ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை? **(அல்லது)**

ஆ) கடன் பத்திரங்களின் வகைகள் ஏதேனும் ஐந்தினை விவரி.

44) அ) நுகர்வோரின் உரிமைகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக. **(அல்லது)**

ஆ) செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளைக் கூறுக.

45) அ) குறிப்பு வரைக: (1) புறத்திறனீட்டல் (2) வேட்டையாடுதல் **(அல்லது)**

ஆ) தொழில்முனைவோர் மற்றும் அகத் தொழில்முனைவோர் இவர்களை வேறுபடுத்துக.

46) அ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**

ஆ) செபியின் அதிகாரங்களை விவரி.

47) அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? **(அல்லது)**

ஆ) திருமதி. மஹாலட்சுமி என்பவர் புதிய தொழில் ஒன்றைத் தொடங்க விரும்புகிறார். [illegible] தொழில் பிரயாணத்தில் எதிர்கொள்ளும் ஐந்து சவால்களை விவரிக்கவும்.

----------

23.01.2023

RM

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

காலம் : 3.00 மணி

மதுரை மாவட்டம்

மதிப்பெண்கள் : 90

### பிரிவு - I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :-** 20 X 1 = 20

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை .......... என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

3. மூலதனச்சந்தை என்பது .......... க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) குறுகிய காலநிதி ஆ) நடுத்தர காலநிதி
இ) நீண்டகால நிதி ஈ) குறுகிய கால நிதி மற்றும் நடுத்தர கால நிதி

4. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

5. அரசுப்பத்திரங்கள்............. போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.
அ) மத்திய அரசு ஆ) மாநில அரசுகள் இ) பகுதி அரசு அமைப்புகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

6. பங்குச்சந்தை ........... வியாபாரத்தை அனுமதிக்கிறது.
அ) நிறுவனங்களின் அனைத்து வகையிலான பங்குகள் ஆ) அரசாங்கம் வெளியிடும் பத்திரங்கள்
இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள் ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

7. காகித வடிவிலான பங்குகளை மின்னணு வடிவில் மாற்றுவதற்கான செயல்முறை ......... ஆகும்.
அ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஆ) பட்டியலில் இருந்து விலக்குதல்
இ) புறத்தோற்றம் உள்ள பத்திரங்கள் ஈ) தடையுள்ள பத்திரங்கள்

8. மனிதவளம் என்பது ஒரு .......... சொத்து.
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான ஈ) நடப்பு

9. விளம்பரம் என்பது ஒரு ............. ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அகவளங்கள் ஆ) புறவளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

10. சரியான நபரை சரியான வேலைக்கு வைப்பது என்பது?
அ) பயிற்சி ஆ) பணியமர்த்தல் இ) பதவி ஈ) உயர்வு மாற்றம்

11. பணிவழி பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) தொழிற்சாலைக்கு வெளியில்
இ) வேலையில்லா நாட்களில் ஈ) விளையாட்டு மைதானத்தில்

12. உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

13. தூய சில்லரை விற்பனையாளர் என அழைக்கப்படுபவர்.
அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள் இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்

14. முதலில் வேலை அடுத்து மனிதன் என்பது ஒரு கோட்பாடு
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

15. இயக்குநர் கூட்டம் ஆண்டுக்கு குறைந்தது ............... முறைகள் கூட்டப்படவேண்டும்.
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

16. .......... பொருட்கள், சேவைகள், மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தேசிய பொருளாதாரங்களுக்கு இடையில் தடைகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளாகும்.
அ) தனியார் மயமாக்கல் ஆ) தாராளமயமாக்கல் இ) உலகமயமாக்கல் ஈ) வெளிநாட்டு வர்த்தகம்

17. தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார்?
அ) இந்திய உச்சநீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
ஆ) பிரதம மந்திரி ஆ) இந்தியத்தலைவர்கள் ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல

18. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு | - | i. 1960 |
| "இந்தியாவில் தயாரிப்பு திட்டம்" | - | ii. 2014 |
| ஸ்டாண்ட் அப் இந்தியா | - | iii. 2015 |
| மாற்றுமுறை ஆவணச்சட்டம் | - | iv. 1881 |
| சரக்கு விற்பனைச்சட்டம் | - | v. 1930 |
| புதிய பொருளாதாரக் கொள்கை | - | vi. 1991 |

அ) i, ii, iii, iv, v, vi ஆ) ii, i, iii, vi, v, iv இ) vi, v, iv, iii, ii, i ஈ) iv, i, ii, iii, v, vi

19. கூற்று (A) : தெளிவான தொழில் முனைவோர் உளவியல் மற்றும் பொருளாதார காரணிகளால் உந்தப்பட்டு தொழில் துவங்க முனைந்தவர்கள்
காரணம் (R) : அவர்கள் தன்னுடைய அறிவு, பட்டறிவு, அனுபவம், திறமை, ஆற்றல் போன்றவற்றை உள்ளடக்க செலுத்தி தான் மேற்கொண்ட தொழில் வினையை வெற்றிகரமாக செயல்படவைத்து அதன் மூலம் இலாபம் பார்ப்பவர்கள்.
அ) (A) மற்றும் இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம்
ஆ) (A) மற்றும் இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம் அல்ல
இ) (A) தவறு ஆனால் (R) சரி
ஈ) (A) சரி (R) தவறு

20. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும் :
அ) திறந்த நடைமுறை
ஆ) குரல் வாக்கெடுப்பு
இ) கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்கெடுப்பு
ஈ) வாக்கு சீட்டு முறை

## பிரிவு - II

குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயம் பதிலளிக்கவும் :- 7 X 2 = 14

21. மேலாண்மை என்றால் என்ன?
22. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?
23. விதிவிலக்கு மேலாண்மையின் பொருளை எடுத்துக்கூறுக.
24. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?
25. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
26. அரசுபத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
27. "வாங்குவோர் ஜாக்கிரதை" என்றால் என்ன?
28. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
29. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
30. வலைதளங்களில் இருக்கும் வேலைவாய்ப்பு இணையதளங்களின் பெயர்கள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.

## பிரிவு - III

குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்கு பதிலளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக பதிலளிக்கவும் :- 7 X 3 = 21

31. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?
32. மூலதனச்சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.
33. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
34. காளை மற்றும் கரடி - விளக்குக.
35. சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை?
36. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
37. புதிய பொருளாதார கொள்கை பற்றி ஒரு சிறிய குறிப்பை எழுதுக.
38. விற்பனை உடன்பாடு என்றால் என்ன?
39. "எழுந்திரு இந்தியா" என்றால் என்ன?
40. ஒரு பணியாளரின் மருத்துவ பரிசோதனை ஏன் அவசியமாகிறது?

## பிரிவு - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :- 7 X 5 = 35

41. மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. ***(அல்லது)***
முதல்நிலைச்சந்தை மற்றும் இரண்டாம்நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.
42. பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி. ***(அல்லது)***
நுகர்வோரின் உரிமைகள் யாவை?
43. பங்குச்சந்தையின் பணிகளை விவரி. ***(அல்லது)***
செபியின் பணிகளை விவரி.
44. பணியாளர் மேலாண்மையிலிருந்து மனிதவளத்தை வேறுபத்திக்காட்டுக. ***(அல்லது)***
ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்குமுள்ள வேறுபாடுகளை தருக.
45. இயக்குநரின் தகுதிகள் பற்றிக் கூறுக. ***(அல்லது)***
நிறுமச்செயலரின் பணிகளை விளக்குக.
46. சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி. ***(அல்லது)***
நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986ன் நோக்கங்கள் யாவை?
47. சரக்கு விற்பனைச்சட்டத்தின் சரக்கினை வகைப்படுத்திக் காட்டுக. ***(அல்லது)***
ரகு என்பவர் ஒரு நிறுவனத்தில் சலவை இயந்திரம் ஒன்றை இரண்டு வருட உத்தரவாதத்துடன் வாங்கினார். பயன்படுத்த தொடங்கிய இரண்டு மாதத்தில் சலவை இயந்திரம் பழுதாகிவிட்டது. உடனடியாக ரகு அந்த நிறுவனத்திடம் புகார் அளித்தார். ஆனால் நிறுவனம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இச்சூழலில் ரகுவிற்கு நீங்கள் அளிக்கும் ஆலோசனைகளை தருக.

*RM 12 Commerce Page - 2*

Way to Success